# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | எ.த.சா.2 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | G.விஸ்வநாதன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | கணேசன் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 12th day of April 2022.

முதல் விசாரணை

நான் கோயமுத்தூர், ராம்நகர், சிட்டி யூனியன் வங்கி கிளையில் முதன்மை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கு தொடர்பாக எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு எங்களது வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது. கணக்கு எண்.418389 ஆகும். Ex.P.77 வரிசை ஆவணம் மேற்படி சேமிப்பு கணக்கு எண்.418389 க்கான சேமிப்பு கணக்கு அறிக்கை ஆகும். (Ex.P.77 வரிசை ஆவணத்தை சாட்சியிடம் காண்பித்து வினவப்படுகிறது) 11.10.2007 ஆம் தேதி அன்று மேற்படி சேமிப்பு கணக்கு எண்.418389-ல் ரூ.101/- ரொக்கமாக செலுத்தப்பட்டு Credit ஆகியுள்ளது. அதே தேதியில் ரூ.46,55,520/- மேற்படி சேமிப்பு கணக்கு எண்.418389-ல் Credit ஆகியுள்ளது. மேற்படி திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சேமிப்பு கணக்கு எண்.418389-ற்கான கணக்கு விவர அறிக்கையை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். 11.10.2007 முதல் 08-05-2009 வரைக்கான கணக்கு விவர அறிக்கையை கொண்டு வந்துள்ளேன். அந்த அறிக்கையுடன் கம்ப்யூட்டர் சிஸ்டம் டிப்பார்ட்மெண்ட்,

சென்னையிடமிருந்து மேற்படி 11.10.2007 ல் Credit ஆகியுள்ள ரூ.46,55,520/- க்கான விவரங்களைக் கேட்டோம்.

1. காசோலை எண்.247185, ரூ.25,00,000/-

2. காசோலை எண்.247186, ரூ.21,55,520/-

என்ற விவரப்படி ING Vysya Bank, திருப்பூர் கிளையில் வரையப்பட்ட காசோலை மூலம் மேற்படி தொகை ரூ.46,55,520/- வரவாகியுள்ளது. 11.10.2007 ஆம் தேதியில் எங்கள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு வசூலாகியுள்ளது. அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கிறேன். அது Ex.D.1 வரிசையாகும். (Ex.D1 வரிசை ஆவணம் மூன்று தாள்களில் நான்கு பக்கங்களில் காணப்படுகிறது) மேற்படி Ex.D.1 ஆவணத்தில் முதல் பக்கம் கம்ப்யூட்டர் சிஸ்டம் டிபார்ட்மெண்ட்டில் உள்ள அசிஸ்டெண்ட் ஜெனரல் மேனேஜர் திரு.செந்திலகுமார் அவர்களால் சிட்டியூனியன் வங்கி, ராம்நகர் கிளைக்கு அனுப்பப்பட்ட தகவல் ஆகும். இரண்டாவது தாளில் உள்ள தகவலும் மேற்படி அசிஸ்டெண்ட் ஜெனரல் மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்களால் சிட்டியூனியன் வங்கி, ராம் நகர் கிளைக்கு அனுப்பப்பட்ட தகவல் ஆகும். மேற்படி ஆவணத்தில் வங்கி Code நெம்பர் 64 என குறிப்பிடப்பட்டுள்ளது. அது ING Vysya வங்கி, திருப்பூர் கிளைக்கான Code எண் ஆகும். காசோலை எண்.247185, ரூ.25 லட்சம், காசோலை எண்.247186, ரூ.21,55,520/- ம் குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.D.1-ன் 3 வது தாள் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சேமிப்பு கணக்கு குறித்த கணக்கு அறிக்கை ஆகும். அதில் 11.10.2007-ல் S.CRS என குறிப்பிடப்பட்டு, ரூ.46,55,520/- Credit ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. S.CRS என்றால் Sundry creditors என பொருள் ஆகும். மேற்படி தொகை காசோலை எண்கள்.247185, 247186 காசோலைகளின் மூலம் Credit ஆகியுள்ளது. எங்கள் வங்கியில் 2007 ஆம் வருடத்தில் Multiple



Credit ஆக வரப்பெற்ற காசோலை மூலமான தொகைகளை Sundry Creditors என்ற தலைப்பில் வரவு வைத்து வரவு ஆனதற்கு மறுதினம் சம்மந்தப்பட்ட வாடிக்கையாளரின் வங்கி கணக்கில் Credit செய்வோம். மேற்கண்ட முறையில்தான் 11.10.2007 ல்

ரூ.46,55,520/- திருப்பூர் ஐ.என்.ஜி வைசியாள் வங்கியின் இரண்டு காசோலைகள் மூலம் எங்கள் வங்கி சேமிப்பு கணக்கு எண்.418389 Credit ஆகியுள்ளது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் M.Com., பட்டப்படிப்பு படித்துள்ளேன். கடந்த 32 வருட காலமாக நான் வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15 வருட காலமாக நான் வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கோவை, ராம்நகர், சிட்டியூனியன் வங்கியில் முதன்மை மேலாளராக 2019 ஆம் வருடம் மே மாதத்திலிருந்து பணிபுரிந்து வருகிறேன். 2007 ஆம் வருடத்தில் இவ்வழக்கு தொடர்பான பரிவர்த்தனை காலத்தில் எனக்கும், கோவை, ராம்நகர், சிட்டியூனியன் வங்கி கிளைக்கும் தொடர்பு இல்லை என்றால், சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து வரப் பெற்ற அழைப்பாணையில் (a) மற்றும் (b) ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி, திருப்பூர், காசோலை எண்.247185, காசோலை தேதி 05.10.2007 மற்றும் காசோலை எண்.247186, காசோலை தேதி 05.10.2007 தொடர்பான திரு.என்.பழனிசாமி அவர்கள் பெயரில் வழங்கப்பட்ட காசோலைகள் குறித்த ஆவணங்களை முன்னிலைப்படுத்தி வாய்மொழி சாட்சியம் அளிக்க கோரப்பட்டுள்ளது என்றால், சரிதான். அழைப்பாணையில் (a), (b)யில் சொல்லப்பட்டுள்ள காசோலை தொடர்பான ஆவணங்களை நான் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். பாரத ரிசர்வ் வங்கியின் விதிகளின்படி 10 வருட காலத்திற்குத்தான் காசோலை தொடர்பான ஆவணங்களை வங்கி வைத்திருக்கும். 10 வருடத்திற்கு பிறகு அந்த



ஆவணங்களை நாங்கள் Disposed செய்து விடுவோம். சுமார் 20 வருட காலமாகவே வங்கி பரிவர்த்தனைகள் அனைத்தும் கணினிமையமாக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். Ex.D.1 வரிசையில் உள்ள திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களது சேமிப்பு கணக்கு குறித்த கணக்கு விவர அறிக்கை 2007 ஆம் காலத்திற்கான கம்ப்யூட்டர் பிரிண்ட்டைத்தான் கொண்டு வந்துள்ளேன் என்றால், சரிதான். ஐ.என்.ஜி. வைசியாள் வங்கியின் இந்த வழக்கு தொடர்பான காசோலை நடவடிக்கைகள் 2007 ஆம் வருடத்துடையது என்றால் சரிதான்.

கேள்வி - இந்த வழக்கு தொடர்புடைய ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி காசோலைகளின் பண பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஐ.என்.ஜி. வைசியாள் வங்கியால் பராமரிக்கப்பட்டு வருகிறதா?அல்லது இல்லையா? என்பதை ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி அதிகாரிகளால்தான் சொல்ல முடியும், என்றால்,

பதில் - சரிதான். இந்திய ரிசர்வ் வங்கியின் பொதுவான விதியைத்தான் நான் சொன்னேன்.

சென்னை கம்ப்யூட்டர் சிஸ்டம் டிபார்ட்மெண்ட்டிலிருந்து 11.10.2007 ல் Crddit ஆகியுள்ள ரூ.46,55,520/-ற்கான விவரங்களை கேட்டுள்ளோம் என்று நான் முதல் விசாரணையில் சொன்னதற்கு எழுத்து மூலமான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இ-மெயில் மூலமாக சிட்டியூனியன் வங்கி, ராம்நகர் கிளையிலிருந்து கேட்கப்பட்டு, இ-மெயில் மூலமாக பதில் பெறப்பட்டுள்ளது. Ex.D.1 ன் முதல் பக்க இ-மெயில் கடிதம் cub034@cityUnion Bank.in என்ற முகவரிக்கு வந்துள்ளது.அது சிட்டியூனியன் பேங்க், ராம் நகர் கிளையின் இ-மெயில் ஐ.டி ஆகும். என்னுடைய பெயரில் தனிப்பட்ட முறையில் கம்ப்யூட்டர் சிஸ்டம் டிபார்ட்மெண்ட்டிலிருந்து பெறப்படவில்லை என்றால், சரிதான். Ex.D.1-ல் முதல் பக்கத்தில் நான் சான்றொப்பம் செய்துள்ளேன். Ex.D.1-ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவைகளும், எனது அறிவிற்கு தெரிந்தவைகளும் ஆகும். Ex.D.1-ல் the following cheques have



been presented in clearing on 09-10-2017 and cleared. என எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 11.10.2007 தேதியிட்ட திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சேமிப்பு கணக்கு எண்.418389-ல் இரண்டு காசோலைகள் மூலமாக நடைபெற்ற பரிவர்த்தனைப் பற்றி சொல்லப்படவில்லை என்றால், சரிதான். Ex.D.1 ல் முதல் பக்கத்தில் " the proceeds are credited in internal 10050 (Sundry creditors)” என எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள இரண்டு ஐ.என்.ஜி வைசியாள் வங்கி காசோலை எண்.247185, ரூ.25,00,000/- காசோலை எண்.247186, ரூ.21,55,520/- மூலமாக

திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் சேமிப்பு கணக்கு எண்.418389 -ல் வரவாகியுள்ளது எனச் சொல்வதற்கு Ex.D.1 ல் உள்ள Statement of account -ல் எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான். 2007 ஆம் வருட காலகட்டத்தில் அவ்வாறு காசோலை எண்களை கணக்கு விவர அறிக்கையில் கொண்டு வர முடியாது. அதற்கான வசதிகள் இல்லை. 2007 ஆம் வருடத்தில் NEFT, RTGS, by cheque, by cash, and Demand draft வழியாக பண பரிவர்த்தனை செய்ய முடியும் என்றால், 2007 ஆம் வருடத்தில் NEFT, RTGS முறையில் பண பரிவர்த்தனை செய்யும் வசதி இருந்ததா எனக்குத் தெரியாது. 2007 ஆம் வருடத்தில் by cheque, by cash, and Demand draft முறையில்தான் பண பரிவர்த்தனை நடந்தது. என்ன வழியில் Credit செய்கிறோமோ 2007 ஆம் வருடத்தில் கணக்கு விவர அறிக்கையில் வெளிப்படும் என்றால், சரிதான். இந்த வழக்கில் காசோலை மூலமாக ரூ.46,55,520/- சேமிப்பு கணக்கு எண்.418389 ல் வரவாகியுள்ளதாக கணக்கு விவர அறிக்கையில் காணவில்லை என்றால், சரிதான். Sundry creditors என்பது வங்கியில் புழங்கிவரும் ஒரு தலைப்பு ஆகும். Sundry creditors என்பது இரண்டு வணிக நிறுவனங்களுக்குள் வியாபார தொடர்பு நடைபெறும்பொழுது On Credit basis-ல் பொருட்களை



கொடுத்தவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அந்த பொருட்களின் தொகையைப் பெற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டு அதன் அடிப்படையில் அந்த காலத்திற்கு பிறகு பொருட்களை பெற்றுக் கொண்டவரால் மீண்டும் அந்த தொகை பொருட்களை வழங்கியவருக்கு வரும்பொழுது அது குறித்த பரிவர்த்தனைதான் Sundry creditors, Sundry debitors என்பதாகும். Sundry credit, Sundry debit என்பது இரண்டு வணிக நிறுவனங்களின் வணிக தொடர்பான பண நடவடிக்கைகளை குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் என்றால் சரியல்ல. வங்கி நடவடிக்கைகளிலும் மேற்படி சொற்றொடர்களை பயன்படுத்துகிறோம். Code No.064, ING வைசியா வங்கிக்கு உரியது என்பதற்கு ING வைசியா வங்கியிடமிருந்து எவ்வித சம்மத கடிதமும் பெறவில்லை என்றால் சரிதான். ExD1 வரிசை கணக்கு விவர அறிக்கையில்

31.10.2007 ல் LIC க்கு ரூ.10 லட்சமும், 07.01.2008 ல் கணக்கு எண். CD18121 எண்ணில் ரூ.10 லட்சமும் , 09.01.2008 ல் கணக்கு எண். CD18121 எண்ணில் ரூ.10 லட்சமும், 10.01.2008 ல் கணக்கு எண். CD18121 எண்ணில் ரூ.16 லட்சமும், டெபிட் செய்யப்பட்டுள்ள விவரம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அவைகள் தனித்தனியான காசோலைகள் மூலம் எடுக்கப்பட்டது. ExD1 வரிசை ஆவணத்தில் 14.10.2008 ல் காசோலை எண்.23455758, 25.11.2008 ல் காசோலை எண்.24539574 ஆகிய காசோலைகளின் வழி ரூ.83,100/- + ரூ.83,100 கிரிடிட் ஆகியுள்ளது என்றால், அது தனிப்பட்ட காசோலை ஆகும். அது வெவ்வேறான தேதி கொண்டதாகும். அது Multiple Cheque அல்ல. எனது முதல் விசாரணையில் Multiple கிரிடிட் மூலம் வரப்பெற்ற காசோலை மூலமான தொகைகளை Sundry Creditors என்ற தலைப்பில் வரவு வைத்து, வரவானதிற்கு மறுதினம் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரின் வங்கி கணக்கில் கிரிடிட் செய்வோம் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ,சரிதான். அதன் அடிப்படையில்

..7..

சேமிப்பு கணக்கு எண்.418389 ற்கு ரூ.46,55,520/- எந்த தேதியில் Multiple Credit ஆக வந்தது, எந்த தேதியில் Sundry Credit ஆக வரவு வைக்கப்பட்டது என்றால், Multiple Credit ஆக வந்ததிற்கு ஆதாரம் கொண்டுவரவில்லை. Sundry Credit ஆக வரவு வைக்கப்பட்டதற்கு சேமிப்பு கணக்கு அறிக்கையில் காண்பிக்கப்பட்டது. மேற்படி ரூ.46,55,520/- இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கு இடையேயான பணப்பரிவர்த்தனையா அல்லது இரண்டு நிறுவனங்களுக்கு இடையேயான பணப்பரிவர்த்தனையா என சொல்லமுடியுமா என்றால், கண்டிப்பாக சொல்லமுடியாது. Sundry Creditors என்பது இரண்டு வணிக நிறுவனங்களுக் கு இடையே நடைபெறும் பணபரிவர்த்தனை என எனக்கு தெரிந்திருந்தும், Statement of Account ல் இல்லாத ஒரு விஷயத்தை மேற்கண்ட தொகை இரண்டு காசோலைகள் மூலம் வந்ததாக ஆவணங்களுக்கு விரோதமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. ரூ.46,55,520/- காசோலை மூலம் சேமிப்பு கணக்கு எண்.418389-ற்கு வரப்பெறவில்லை என்றால் சரியல்ல.

உண்மையிலேயே மேற்படி தொகை காசோலை மூலம் வந்திருந்தால் காசோலை எண் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/விஸ்வநாதன்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/R.Sakthivel,
Principal District Judge,
Coimbatore.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | எ.த.சா.3 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | M.சுப்பிரமணியம் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 12th day of April 2022.

முதல் விசாரணை

நான் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் சக்தி பிலிம்ஸ் என்ற பெயரில் சினிமா வினியோகஸ்தராக தொழில் செய்து வருகிறேன். முன்னாள் அமைச்சர் திரு.பொங்களூர் பழனிச்சாமி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை எனக்கு நன்கு தெரியும். 1980-1982 வருட வாக்கில் திரு.பொங்களூர் பழனிச்சாமி மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் சினிமா வினியோகஸ்தர்களாக இருந்து வந்தார்கள். அந்த வகையில் எனக்கு அவர்களை தெரியும். திரு.பொங்களூர் பழனிச்சாமி அவர்களது குடும்பத்தாருக்கும் எனக்கும் இடையே வரவுசெலவுகள் இருந்து வந்தது. ஏதாவது பணத்தேவை என்றால், அவர்கள் என்னிடம் கேட்பார்கள் நான் கொடுப்பேன். அதேபோல், எனக்கு ஏதாவது பணத்தேவை என்றால், நான் அவர்களிடம் கேட்பேன் அவர்கள் எனக்கு கொடுப்பார்கள். ExP.114 ல் ஜெனரல் லெட்ஜர் என்ற தலைப்பில் இரண்டு தாள்களும், லெட்ஜர் அக்கவுண்ட் என்ற தலைப்பில் ஒரு தாளும், திரு.என்.பழனிச்சாமி அவர்களது பெயரில் ஒரு தாளும் உள்ளது. அதே போல் ஜெனரல் லெட்ஜர் என்ற பெயரில் திருமதி விஜயலட்சுமி அவர்கள் பெயரில் மூன்று தாள்கள்,

Ledger Account என்ற பெயரில் திருமதி பி.விஜயலட்சுமி பெயரில் ஒரு தாளும் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சக்தி பிலிம்ஸின் உரிமையாளர் என்ற முறையில் ஒவ்வொரு தாளிலும் நான் கையெழுத்து செய்திருக்கிறேன். அந்த தாளின் தலைப்பில் சக்தி பிலிம்ஸின் முகவரி சொல்லப்பட்டுள்ளது. 22.10.2005 ஆம் தேதியில் நான் திரு.பொங்கலூர் பழனிசாமியிடமிருந்து காசோலை எண்.463717-ன்படி காசோலை தேதி 22.10.2005 Indus-Ind வங்கி வழியாக ரூ.25,00,000/- நான் வாங்கியுள்ளேன். அது General Ledger-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தாளில் நான் சக்தி பிலிம்ஸின் உரிமையாளர் என்ற முறையில் கையெழுத்து செய்துள்ளேன். அந்த தொகை 2006 ஆம் வருட General Ledger-ல் எடுத்து எழுதப்பட்டுள்ளது. அந்த தாளிலும் நான் சக்தி பிலிம்ஸின் உரிமையாளர் என்ற முறையில் கையெழுத்து செய்திருக்கிறேன். அதில் திரு.என்.பழனிசாமி அவர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையை நான் 5.10.2007 அன்று காசோலை எண்.247185 என்ற ஐ.என்.ஜி.வைசியாள் வங்கி, திருப்பூர் கிளை காசோலை மூலமாக திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு மேற்படி ரூ.25 லட்சத்தை திருப்பிக் கொடுத்துள்ளேன். அதே தாளில் காசோலை எண்.247186 என்ற ஐ.என்.ஜி வைசியாள் வங்கி, 05-10-2007 தேதியிட்ட காசோலை மூலமாக ரூ.21,55,520/- ரூபாய் திரு.என்.பழனிசாமி அவர்களுக்கு வழங்கியுள்ளேன். ஒரே தேதியில் இரண்டு காசோலைகள் திரு.என்.பழனிசாமி பெயரில் கொடுத்ததற்கான விவரம் என்னவென்றால், ரூ.25,00,000/- திரு.என்.பழனிசாமி அவர்களிடம் நான் கடனாக வாங்கிய தொகையாகும். ரூ.21,55,520/- என்பது திருமதி விஜயலட்சுமி அவர்களிடமிருந்து அசல் கடன் தொகை ரூ.20,00,000/- வாங்கியிருந்ததில் கூடிய வட்டி சேர்த்து 21,55,520/- என காசோலை எண்.247186-ன்படி நான் கொடுத்துள்ளேன். 5.10.2007 ஆம் தேதிக்கு முன்பாக திருமதி விஜயலட்சுமி அவர்கள் காலமாகி விட்டதால் அவரிடமிருந்து வாங்கிய தொகையை நான் திரு.என்.பழனிசாமி அவர்களிடம் வட்டியுடன் சேர்த்துக் கொடுத்தேன். Ex.P.114 General Ledger-ல் திருமதி விஜயலட்சுமி அவர்களிடமிருந்து வாங்கிய தொகை குறித்த விவரமும், அதை செலுத்திய விவரமும்,

அதற்காக டி.டி.எஸ். பிடித்தம் செய்யப்பட்ட விவரமும் சொல்லப்பட்டுள்ளது. வட்டி தொகையும் சொல்லப்பட்டுள்ளது. 1.4.2004 ஆம் தேதியிட்ட காசோலை எண்.144205, ஐசிஐசிஐ வங்கி மூலமாக நான் ரூ.20,00,000/- கடனாக திருமதி விஜயலட்சுமி பழனிசாமியிடமிருந்து வாங்கினேன். அந்த விவரமும் மேற்படி தாளில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகைக்கு திருமதி விஜயலட்சுமி அவர்களுக்கு நான் கொடுத்த வட்டி விவரமும், டி.டி.எஸ். பிடிக்கப்பட்ட விவரமும் இந்த தாளில் உள்ளது. 2005 ஆம் வருடத்தில் மேற்படி கடன் தொகை General Ledger-ல் எடுத்து எழுதப்பட்டுள்ளது. திருமதி விஜயலட்சுமி அவர்களுக்கு நான் கொடுக்கவேண்டிய வட்டி தொகை, டி.டி.எஸ். விவரமும் மேற்படி தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரூ.21,55,520/- 31.3.2006 தேதியில் நான் திருமதி விஜயலட்சுமி பழனிசாமிக்கு கொடுக்கவேண்டிய தொகையாகும். அடுத்த தாளில் General ledger 2006-2007-ல் மேற்கண்ட தொகை எடுத்து எழுதப்பட்டுள்ளது. அதன்பிறகு திருமதி விஜயலட்சுமி காலமாகி விட்டதால் அந்த தொகை ரூ.21,55,520/- திரு.என்.பழனிசாமி அவர்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அந்த விவரம் Ledger Account-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இரண்டு ஐ.என்.ஜி.வைசியாள் வங்கி, திருப்பூர் கிளை மூலம் திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்கு ரூ.25,00,000/-, ரூ.21,55,520/- ஆகிய தொகைகளுக்கான இரண்டு காசோலைகள் திரு.என்.பழனிசாமி அவர்களின் சேமிப்பு கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, அது வசூலாகியுள்ளது. Ex.P.114-ல் உள்ள மேற்படி தாள்கள் என்னால் பொங்கலூர் பழனிசாமி அவர்களிடம் கையெழுத்து செய்து ஒப்படைக்கப்பட்டதாகும். (சாட்சி Ex.P.114 ஆவணத்தின் இணைப்பு 1,2 ஆவணங்களைப் பார்த்து அதில் உள்ள கையெழுத்தும், கணக்கு விவரமும் சரியானது என அடையாளம் காண்பித்து சாட்சி சொல்கிறார்) இன்று நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்ககோரி இந்நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையின் அடிப்படையில்தான் நான் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் சொல்கிறேன்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ளேன். எனக்கு வரப்பெற்ற அழைப்பாணையில் ஐ.என்.ஜி.வைசியாள் வங்கி, திருப்பூர் வங்கி காசோலை எண்.247185, தேதி 05-10-2007 திரு.என்.பழனிசாமி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ரூ.25,00,000/-த்திற்கான காசோலை குறித்த ஆவணங்களை முன்னிலைப்படுத்தி, வாய்மொழி சாட்சியம் அளிக்கவும், மேற்படி ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி, திருப்பூர் கிளை காசோலை எண்.247186 தேதி 05-10-2007 காசோலை தொகை ரூ.21,55,520/- குறித்த ஆவணங்களை முன்னிலைப்படுத்தி, வாய்மொழி சாட்சியம் அளிக்கவும் அழைப்பாணையில் கோரப்பட்டுள்ளது என்றால், சரிதான். அழைப்பாணையில் கண்ட ஐ.என்.ஜி. வைசியாள் வங்கி கணக்கு விவர அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், அழைப்பாணையில் வங்கி கணக்கு விவர அறிக்கை தாக்கல் செய்ய கோரப்படவில்லை. ஆதலால் அதை நான் கொண்டு வரவில்லை. 2007 ஆம் வருடத்திற்கான ஐ.என்.ஜி.வைசியாள் வங்கி, திருப்பூர் கிளை வங்கி கணக்கு விவர அறிக்கையை நான் முன்னிலைப்படுத்தவில்லை என்றால், சரிதான். அவற்றை முன்னிலைப்படுத்துமாறு அழைப்பாணையில் குறிப்பாக சொல்லப்படாததத்தால் நான் முன்னிலைப்படுத்தவில்லை. நான் சக்தி பிலிம்ஸின் வினியோகிஸ்தர் எனச் சொல்வதற்கு பதிவு சான்றிதழையோ அல்லது வேறு ஆதரவுகளையோ நான் முன்னிலைப்படுத்தவில்லை என்றால், சரிதான். அவ்வாறு முன்னிலைப்படுத்துமாறு கோரப்படாததால் முன்னிலைப்படுத்தவில்லை. சக்தி பிலிம்ஸ் கம்பெனிக்கு பதிவுச் சான்றிதழ் எதுவும் இல்லை. பொதுவாகவே சினிமா இண்டஸ்ட்ரீக்கு பதிவு சான்றிதழ் வாங்குவதில்லை. Ex.P.114-ல் காணப்படும் ஆவணங்களில் நான் திரு.பொங்கலூர் பழனிசாமிக்கு கையெழுத்திட்டுக் கொடுத்துள்ள ஆவணங்கள் எந்த தேதியில் கொடுத்தேன் என்பது பற்றி அதில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். கையெழுத்து மட்டும் செய்து கொடுத்துள்ளேன். 22.10.2005 தேதியிட்ட Indus-Ind வங்கி, கோயமுத்தூர் காசோலை எண்.463717, தொகை ரூ.25,00,000/- காசோலை மூலமாக

திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களால் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த காசோலை திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்களின் Indus-Ind வங்கி கணக்கு காசோலை என்றால், சரிதான். எனக்கு வங்கி பரிவர்த்தனைகள், வங்கி கணக்கு விவர அறிக்கைகள் ஆகியவற்றை பார்த்திருக்கிற அனுபவம் உண்டா என்றால், நிறைய உண்டு. ஒரு வங்கியில் ஒரு வாடிக்கையாளருக்கு காசோலை புத்தகம் வழங்கப்படும்பொழுது அந்த காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை எண்கள் வேறு ஒரு நிறுவனத்திற்கோ அல்லது வேறு ஒரு நபருக்கோ வழங்கப்பட மாட்டாது என்றால், சரிதான். எனக்கு திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் கொடுத்த காசோலை எண்.463717 Indus-Ind வங்கி, கோயமுத்தூர் காசோலை என்றால், சரிதான்.

(Ex.P.83 ஆவணத்தில் 25 பக்கம் கொண்டதில் பக்கம் 9 ஐ சாட்சியின் கவனத்திற்கு கொண்டு வந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முயற்சிக்கப்படுகிறது. எதிரி தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி Ex.P.83 ஆவணத்தில் பக்கம் 9 ஐ சாட்சியிடம் காண்பித்து, கேள்வி கேட்க அரசு தரப்பிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், சாட்சி முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைப் பொருத்த மட்டுமே அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முடியும் என்றும், சாட்சி Ex.P.83 ஆவணத்தில் பக்கம் 9 குறித்து எதுவும் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கப்படாத நிலையில் சாட்சியிடம் மேற்படி ஆவணத்தை காண்பித்து அல்லது அதில் உள்ள விவரங்களைக் குறித்து கேள்வி கேட்க முடியாது என கடும் ஆட்சேபணையை தெரிவிக்கிறார்.

இதை மறுத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணையின்பொழுது சாட்சியிடம் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களைக் காண்பித்து அதில் கண்ட விவரங்கள் குறித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு உரிமை உள்ளது என்றும், எனவே எதிரி தரப்பில் சொல்லப்படும் ஆட்சேபணைகள் நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடுகிறார்.

இந்நீதிமன்றம் இருதரப்பும் முன்னிட்ட வாதவுரைகளை கவனமாக பரிசீலனை செய்து Ex.P.83 பக்கம் 9 குறித்து சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்ய முடியாது என சொல்ல முடியாது. முதல் விசாரணையில் சாட்சி சொன்ன சங்கதிகளை குறித்து மட்டுமே குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்க முடியும் என சொல்லப்படும் ஆட்சேபணைகள் நிலைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து, அரசு தரப்பில் சாட்சியிடம் இது குறித்து குறுக்கு விசாரணை செய்ய சட்டப்படி எவ்வித தடையும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்குகிறது)

கேள்வி - Ex.P.83 -ல் பக்கம் 9 ல் மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் கணக்கு எண்.0021-442091-060, தேதி 31.3.2006 என எழுதப்பட்டுள்ளதா?

பதில் - அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது.

கேள்வி - Ex.P.83 ல் பக்கம் 9-ல் 24.10.2005 தேதியில் காசோலை எண்.463717 மூலமாக மேரீஸ் சிமெண்ட் அக்கவுண்டிலிருந்து ரூ.25,00,000/- withdrawal செய்யப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளதா?

பதில் - அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. எனது வங்கியான எச்.டி.எப்.சி வங்கியில் 22.10.2005 அன்று காசோலை எண்.463717 ஐ நான் வசூலுக்கு தாக்கல் செய்தேன். அந்த காசோலை 24.10.2005 ஆம் தேதி எனது கணக்கில் வசூலாகியுள்ளது.

கேள்வி - 24.10.2005 ஆம் தேதியில் மேரீஸ் சிமெண்ட்டுக்கு பாத்தியப்பட்ட காசோலை எண்.463717 ஆனது Indus-Ind வங்கியில் செலுத்தப்பட்டு, ரூ.25,00,000/- பணம் எடுக்கப்பட்டதாக இருக்கும்பட்சத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அதே எண் காசோலையை எனக்கு திரு.பொங்கலூர்பழனிசாமி கொடுத்ததாகச் சொல்வது தவறு என்றால்,

பதில் - சரியல்ல. பணம் எடுக்கப்படவில்லை. எனது சக்தி பிலிம்ஸ் கணக்கில்தான் மேற்படி காசோலை பாஸாகி வந்துள்ளது.

கேள்வி - எந்த தேதியில் பாஸாகி வந்தது என்றால்,

பதில் - 26.10.2005 ஆம் தேதியில் பாஸ் ஆகி வந்தது.

Ledger-ல் சொல்லப்பட்டுள்ளதுபோல் 22.10.2005 -ல் ரூ.25,00,000/- மேற்படி காசோலை மூலமாக என்னுடைய வங்கியான எச்.டி.எப்.சி வங்கிக்கு கிரிடிட்

செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. பொதுவாக வங்கியில் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்தால் இரண்டு நாட்களுக்கு பிறகுதான் கணக்கில் கிரிடிட் ஆகும். அந்த நடைமுறைதான் இந்த காசோலையிலும் பின்பற்றப்பட்டுள்ளது. காசோலை எண்.463717 Indus-Ind வங்கி என்பது மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டின் காசோலை என்றும், அமைச்சர் திரு.பொங்கலூர் பழனிசாமியின் Indus-Ind வங்கி கணக்கு காசோலை அல்ல என்றால், எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. அந்த காசோலை மேரீஸ் சிமெண்ட் காசோலையா அல்லது திரு.என்.பழனிசாமி அவர்களின் காசோலையா என்பது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி காசோலை எண்.463717 என்ற காசோலையை திரு.என்.பழனிசாமி அவர்கள்தான் என்னிடம் கொடுத்தார். அதை நான் வசூலுக்கு தாக்கல் செய்தேன். அது வசூல் ஆகியது. Ex.P.114 ல் இணைப்பு ஆவணமாக உள்ள General Ledger-ல் காசோலை எண் பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் அது எந்த வங்கியின் காசோலை, Account holder-ன் பெயர் ஆகியவைகள் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால், வங்கியின் பெயரை குறிப்பிட்டு எழுதியுள்ளோம். Account holder-ன் பெயர் எழுதப்படவில்லை. Account holder-ன் பெயர் எழுதும் வழக்கம் இல்லை. Ex.P.114 Ledger ல் காசோலை எண்.463717 என்பது மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டின் காசோலை என்பதால்தான் Account holder ன் பெயர் எழுதப்படவில்லை என்றால், தவறாகும். Account holder-ன் பெயர் என்.பழனிசாமி என எழுதியுள்ளேன்.

திருமதி விஜயலட்சுமி அவர்கள் எந்த தேதியில், எந்த வங்கி காசோலை மூலமாக, எந்த காசோலை எண் வழியாக எனக்கு ரூ.20,00,000/- கடனாக வழங்கினார் என்றால், காசோலை எண்.144205 ஐசிஐசிஐ வங்கி 01.04.2004 தேதியிட்ட காசோலை மூலமாக வழங்கினார். அதை நான் எனது லெட்ஜரில் 02.04.2004 அன்று கிரிடிட் செய்துள்ளேன். மேற்படி காசோலை திருமதி விஜயலட்சுமி அவர்களது சேமிப்பு கணக்கு காசோலையா என்றால், அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி காசோலை திருமதி விஜயலட்சுமி அவர்களது பெயரிலான காசோலை என்பதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

(Ex.P.107 ஆவணத்தில் சாட்சியின் கவனத்திற்கு கொண்டு வந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முயற்சிக்கப்படுகிறது. எதிரி தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி Ex.P.107 ஆவணத்தை காண்பித்து, கேள்வி கேட்க அரசு தரப்பிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், சாட்சி முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைப் பொருத்த மட்டுமே அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முடியும் என்றும், சாட்சி Ex.P.107 ஆவணம் குறித்து எதுவும் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கப்படாத நிலையில் சாட்சியிடம் மேற்படி ஆவணத்தை காண்பித்து அல்லது அதில் உள்ள விவரங்களைக் குறித்து கேள்வி கேட்க முடியாது என கடும் ஆட்சேபணையை தெரிவிக்கிறார்.

இதை மறுத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணையின்பொழுது சாட்சியிடம் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களைக் காண்பித்து அதில் கண்ட விவரங்கள் குறித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு உரிமை உள்ளது என்றும், எனவே எதிரி தரப்பில் சொல்லப்படும் ஆட்சேபணைகள் நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடுகிறார்.

இந்நீதிமன்றம் இருதரப்பும் முன்னிட்ட வாதவுரைகளை கவனமாக பரிசீலனை செய்து Ex.P.107 குறித்து சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்ய முடியாது என சொல்ல முடியாது. முதல் விசாரணையில் சாட்சி சொன்ன சங்கதிகளை குறித்து மட்டுமே குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்க முடியும் என சொல்லப்படும் ஆட்சேபணைகள் நிலைக்கத்தக்கதல்ல, மேலும் Ex.P.107 ஆவணம் இவ்வழக்கிற்கு தொடர்புடைய பொருன்மையென அரசு தரப்பால் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணத்தை காண்பித்து அல்லது மேற்படி ஆவணத்தில் உள்ள உள்ளடக்கத்தை குறித்து சாட்சியிடம் அரசு தரப்பின் சார்பில் கேள்வி கேட்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.)

Ex.P.107-ல் 03-04-2004 தேதியில் மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டிற்கு சொந்தமான காசோலை எண்.144205 ஆனது அன்றைய தினம் தாக்கல் செய்யப்பட்டு,

ரூ.20,00,000/- ரூபாய் Withdrawal செய்யப்பட்ட விவரம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், மேற்படி Ex.P.107 ஆவணத்தைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. என்னுடைய கணக்கில் மேற்படி தொகை ரூ.20,00,000/- திருமதி விஜயலட்சுமி காசோலை மூலமாக எனக்கு கொடுத்தார். மேற்படி காசோலையை நான் எச்.டி.எப்.சி வங்கியில் டெபாசிட் செய்தேன். இரண்டு நாட்கள் கழித்து மேற்படி தொகை எனது வங்கி கணக்கில் வரவானது. மற்றவடி மாரீஸ் சிமெண்ட் வரவு செலவு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு வழங்கப்பட்ட மேற்படி காசோலையை திருமதி விஜயலட்சுமி என்னிடம் கொடுத்தார். அது மேரீஸ் சிமெண்ட் காசோலையா அல்லது விஜயலட்சுமியின் காசோலையா என்பது பற்றி எனக்கு ஞாபகமில்லை. காசோலை எண்.144205 ஐசிஐசிஐ வங்கி காசோலையானது திருமதி விஜயலட்சுமியின் கணக்கிற்கு வழங்கப்பட்ட காசோலை அல்ல என்றாலும், அது மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டிற்கு வழங்கப்பட்ட காசோலை என்றாலும், அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. திருமதி விஜயலட்சுமிதான் மேற்படி காசோலையை என்னிடம் கொடுத்தார். 03.04.2004 தேதியில் மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டின் கணக்கில் வசூலுக்கு வந்து, withdrawal ஆகியுள்ளதால் 01.04.2004 ஆம் தேதியில் மேற்படி காசோலையை திருமதி விஜயலட்சுமி அவர்கள் எனக்கு கொடுத்திருக்க வாய்ப்பே இல்லை என்றால், சரியல்ல. திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்களிடமிருந்து நான் தனிநபர் கடனாக நான் வாங்கியதாகச் சொல்வது தவறு என்றால், சரியல்ல. தனிநபர் கடனாகத்தான் நான் வாங்கினேன். திருமதி விஜயலட்சுமி அவர்கள்தான் மேற்படி காசோலையை எனக்கு கொடுத்தார். அவர் எந்த கணக்கிலிருந்து கொடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. Ex.P.114 இணைப்பு ஆவணத்தில் Interest payable account, TDS receivable account என்ற காலங்கள் உள்ளது என்றால், சரிதான். Interest payable account, TDS receivable account என்ற பதங்கள் Sundry creditors, Sundry debtors ஆகிய நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்றால், சரிதான். பொதுவாக கணக்கு புத்தகங்களில் ஒரு நபர் கடன் வாங்கியிருந்தால் அதை கணக்கு புத்தகத்தில் குறிப்பிடும்போது Sundry

Creditors என்ற தலைப்பில் மட்டுமே எழுதுவார்கள். அதேபோல் ஒரு நபர் கடன் கொடுத்திருந்தால் Sundry debtors என்ற தலைப்பில் மட்டுமே குறிப்பிடப்படும். மேற்படி பதங்கள் வணிக நடவடிக்கையின் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்படும் என்றால் சரிதான். நிதி நடவடிக்கையிலும் மேற்படி பதங்கள் பயன்படுத்துவார்கள். நான் சொல்வதுபோல் Sundry creditors, Sundry debtors என்ற பதங்கள் வணிக நடவடிக்கையிலான பரிவர்த்தனையில் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றாலும், தனிநபர்கள் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படமாட்டார்கள் என்றாலும், சரியல்ல. இரண்டு வணிக நிறுவனங்களுக்கிடையேயான நடவடிக்கைகளுக்குத்தான் Sundry creditors, Sundry debtors பயன்படுத்துவார்கள் என்றால், சரியல்ல. நான் இவ்வழக்கில் என்னுடைய General Ledger, Ledgers முதலிய அசல் கணக்கு புத்தகங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அசல் ஆவணத்தை தாக்கல் செய்யும்படி என்னிடம் யாரும் கோரவில்லை. மேலும் Income Tax சட்டப்படி 10 ஆண்டுகளுக்கு முந்தைய கணக்கு புத்தகங்களை யாரும் வைத்து பராமரிப்பது வழக்கத்தில் இல்லை. Ex.P.114 ல் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு ஆவணங்கள் (சக்தி பிலிம்ஸ் சம்மந்தமான ஆவணங்கள்) புகைப்பட நகல்கள் என்பதால் அவைகள் சான்றாவணமாக சாட்சியச் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. மேற்கண்ட ரூ.25,00,000/-, ரூ.20,00,000/- த்தை திரு.பழனிசாமி மற்றும் அவரது மனைவி திருமதி விஜயலட்சுமி அவர்களிடம் நான் சொல்வதுபோல் கடனாக வாங்கியிருந்தால் மேற்படி இரண்டு தொகைகளுக்கும் வட்டி கொடுத்திருப்பேன் என்றாலும், இவ்வழக்கில் ரூ.20,00,000/-த்திற்கு மட்டுமே வட்டி கொடுத்ததாகச் சொல்லியுள்ள நிலையில் உண்மையில் நான் திரு.பழனிசாமி அவர்களிடமிருந்தும், திருமதி விஜயலட்சுமி அவர்களிடமிருந்தும் மேற்சொல்லும் கடன் தொகைகளை வாங்கவில்லை என்றால் சரியல்ல. தனி நபரிடமிருந்து கடன் வாங்கியிருந்து, அக்கடனின் அசல் மற்றும் வட்டி சேர்த்து கொடுக்கும்பொழுது அசல் தொகை என தனியாகவும், வட்டி தொகை என தனியாகவும் வங்கி நடவடிக்கையில் காண்பிக்க மாட்டார்கள் என்றால்,

சரிதான். ஆனால், நான் மேற்படி விஜயலட்சுமி அவர்களிடமிருந்து பெற்ற கடனுக்கு முதல் இரண்டு ஆண்டுகள் மட்டுமே வட்டி தொகையை சேர்த்து அசலும், வட்டியும் கொடுத்திருக்கிறேன். கடைசி இரண்டு ஆண்டுகளுக்கு எந்தவிதமான வட்டியும் அவருக்கும் நான் கொடுக்கவில்லை. திரு.பழனிசாமி அவர்களிடம் நான் வாங்கிய ரூ.25,00,000/- அந்த காலக்கட்டத்தில் எனது நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால், என்னுடைய நிலைமையை திரு.பழனிசாமி அவரிடம் சொல்லி அவருடைய மனைவியிடம் வாங்கிய தொகைக்கும், திரு.பழனிசாமி அவர்களிடம் வாங்கிய தொகைக்கு வட்டியில்லாமல் அசல் தொகையை மட்டும் பெற்றுக் கொள்ளும்படி நட்பு ரீதியில் கேட்டுக் கொண்டேன்.ஆகவேதான் திருமதி விஜயலட்சுமி அவர்களுக்கு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே வட்டி தொகை கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், எந்த ஒரு வங்கியிலும் அசல் தனியாகவும், வட்டி தனியாகவும் வரவு செலவு செய்து காண்பிக்கமாட்டார்கள். பணம் வாங்குபவரும், கொடுப்பவரும் மட்டுமே அவருடைய Books of account-ல் வட்டி தனியாகவும், அசல் தனியாகவும் காண்பிப்பது வியாபார நடைமுறையாகும். மேலும் திருமதி விஜயலட்சுமி கணக்கிற்கு நான் கொடுத்த வட்டி தொகைக்கு TDS கழித்துத்தான் கொடுத்திருக்கிறேன். ஆகவே இது முழுவதும் வங்கி வரவு, செலவு மூலமாகவே நடைபெற்றது. இரண்டு தனி நபர்கள் கடன் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கையில் ஈடுபடும்போது ஒரு நிறுவனத்தின் காசோலை மூலமாக இன்னொரு நிறுவனத்திற்கு கொடுக்க முடியாது என்றால், அது தவறாகும். காரணம் நான் கடன் வாங்கியது முழுக்கமுழுக்க தனி நபரிடம்தான் வாங்கினேன். எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தும் நான் நேரடியாக கடன் வாங்கவில்லை. என்னுடைய Books of account-ல் எந்த இடத்திலும் எந்த நிறுவனத்தின் பெயரும் பிரதிபலிப்பதில்லை. Ex.P.83 மற்றும் Ex.P.107 ஆவணத்தின்படி பார்க்கும்பொழுது அது தனிநபர்கடனாக தெரியவில்லை, அது வணிக நிறுவனங்கள் சம்மந்தமான நடவடிக்கையாகவே காணப்படுகிறது என்றும், நான் சொல்லும் தேதிகளில் அந்த காசோலைகள் எனக்கு வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல. திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் கேட்டுக்

கொண்டதன்பேரில் எனது நிறுவனத்தின் ஆவணங்களை சரிபார்க்காமல் தம்மிச்சையாக Ex.P.114 ஆவணத்தில் சக்தி பிலிம்ஸ் சம்மந்தமான இணைப்பு ஆவணங்களை பொய்யாக தயாரித்துக் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாகவே நான் அசல் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வாய்மொழி சாட்சியமும், நான் குறிப்பிடும் ஆவணச் சாட்சியங்களும் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல. சாட்சி தம்மிச்சையாக மேலும் கூறுகிறார், தனிநபர் கணக்கில்தான் - திருமதி விஜயலட்சுமி அவர்கள் பெயரில் TDS பிடித்தம் செய்து வருமான வரித்துறையில் செலுத்தியுள்ளேன். ஆகவே நான் திரு.பொங்கலூர் பழனிசாமி அவரிடமும், அவரது மனைவி திருமதி விஜயலட்சுமி அவர்களிடம் வாங்கிய கடன்கள் தனிநபர் கடன்களே ஆகும். இரண்டு காசோலைகளும் மேரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட்டிற்கு சொந்தமான காசோலை என்பதால் தனிநபர் கடனுக்கு நிறுவனத்தின் காசோலைகளை கொடுக்க முடியாது என்றால், சரியல்ல. நான் பணத்தை திருப்பிக் கொடுக்கும்போது தனிநபர்களின் பெயரில் மட்டுமே கொடுத்துள்ளேன். TDS பிடித்தம் செய்து தனி நபர் பெயரில்தான் கட்டியுள்ளேன்.

**மறு விசாரணை (அனுமதியுடன்)**

நான் திருமதி விஜயலட்சுமி அவர்களிடம் வாங்கிய கடனுக்கு அசலும், வட்டியும் சேர்த்து ஒரே காசோலையின் மூலமாகத்தான் கொடுத்துள்ளேன். எனது கணக்கு புத்தகத்தில் அசல் தொகை தனியாகவும், வட்டி தொகை தனியாகவும், TDS பிடித்தம் குறித்தும் குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமாக கூடுதல் கண்காணிப்பாளர் திருமதி சண்முகபிரியா அவர்கள் என்னை விசாரித்து ஆவணங்களை கைப்பற்றி வாக்கு மூலம் பதிவு செய்தார்களா என்றால், 10 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டதால் எனக்கு இது குறித்து ஞாபகமில்லை.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.பழனிசாமி அவர்களுக்கும், அவரது மனைவி திருமதி விஜயலட்சுமி அவர்களுக்கும் நான் வழங்கியதாகச் சொல்லும் காசோலை ஐ.என்.ஜி வைசியாள்

வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட காசோலைகள் என்பதைக் காண்பிக்க ஆதரவுகள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நீதிமன்றம் கோரினால் உடனடியாக அதை நான் தாக்கல் செய்யத் தயாராக உள்ளேன். அவ்வாறு ஆதரவுகளை தாக்கல் செய்வது எனது தார்மீக கடமை என்றால், சரியல்ல.

ஒம்/எம்.சுப்பிரமணியம்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/R.Sakthivel,
Principal District Judge,
Coimbatore.